தினமணி

**மேட்டூர் அணையில் திறக்கப்படும் நீரின் அளவு அதிகரிப்பு**

First Published : 20 Sep 2011 05:47:45 AM IST

மேட்டூர், செப் 19: மேட்டூர் அணையிலிருந்து கிழக்கு, மேற்கு கரை கால்வாய் பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு திங்கள்கிழமை முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையின் கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனம் மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் 45 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. ஆண்டுதோறும் ஆகஸ்ட் முதல் வாரத்தில் பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படும்.

நடப்பாண்டில் ஆக. 2-ம் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. கடந்த சில நாள்களாக வினாடிக்கு 600 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், திங்கள்கிழமை மாலை முதல் தண்ணீர் திறப்பு வினாடிக்கு 800 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. திங்கள்கிழமை மாலை மேட்டூர் அணையின் நீர் மட்டம் 94.14 அடியாக இருந்தது. பாசனத்திற்கு வினாடிக்கு 16,612 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. அணைக்கு வினாடிக்கு 12,237 கனஅடிவீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது.

**சின்ன வெங்காயம் ஏற்றுமதிக்கு தடை நீக்க கோரிக்கை**

First Published : 19 Sep 2011 09:43:38 AM IST

ஈரோடு, செப். 18: சின்ன வெங்காயம் விலை வீழ்ச்சி அடைந்து வருவதால், விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பை தடுக்கும் வகையில் ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதி அளிக்க வேண்டும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கச் செயலர் எஸ்.நல்லசாமி கூறியது:

உலக அளவில் பயன்படுத்தப்படும் உணவு பண்டம் வெங்காயம். இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் சின்னவெங்காயம் அதிகளவில் விளைகிறது. இதன் பயன்பாடு தமிழர்கள் மற்றும் தமிழர்கள் வாழும் இடங்களிலும் உள்ளது. தற்போது சின்ன வெங்காயத்தின் விலை வீழ்ச்சியடைந்து வருகிறது. இதனால் விவசாயிகள் கடும் இழப்பை சந்திக்க வேண்டிய நிலை உள்ளது.

வெங்காயம் ஏற்றுமதிக்கு மத்திய அரசு அண்மையில் தடைவிதித்துள்ளது. இதன் எதிரொலியாக தான் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. வேளாண் விளைபொருட்களை ஏற்றுமதி செய்து அதன் மூலம் அன்னிய செலாவணி ஈட்டுவதே இயற்கை. அதனால் இத்தடையை நீக்க வேண்டும்.

**பச்சை நிறமாக மாறிய மேட்டூர் தண்ணீர்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2011,01:03 IST

மேட்டூர் : மேட்டூர் அணை நீர் பச்சையாக மாறியது மட்டுமின்றி, நீரில் இருந்து கிளம்பும் துர்நாற்றம், கரையோர கிராமங்களில் பரவுவதால், சாப்பிட முடியாமலும், அணை நீரை குடிக்க முடியாலும் பொதுமக்கள் அவதிப்படுகின்றனர். மேட்டூர் அணை, 152 சதுரகி.மீ., நீர்பரப்பு பகுதியை கொண்டது. சேலம் மாவட்டத்தில் அணையின் நீர்பரப்பு அருகிலுள்ள கோட்டையூர் முதல் பண்ணவாடி வரை ஏராளமான குக்கிராமம் உள்ளது. கிராமத்தை சேர்ந்த பெரும்பாலான குடும்பத்தினர் அணையில் மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஒரு வாரமாக கோட்டையூர் முதல் பண்ணவாடி வரை தேங்கி நிற்கும் மேட்டூர் அணை நீர் பச்சை நிறமாக மாறியுள்ளது. இதற்கு முன் ஆண்டுதோறும் கோடைகாலத்தில் அணை நீர் பச்சை நிறமாக மாறினாலும், துர்நாற்றம் எதுவும் இருக்காது. ஆனால், தற்போது தேங்கி நிற்கும் நீர் கரும்பச்சை நிறத்துடன் துர்நாற்றமும் வீசுகிறது.

இந்த நாற்றம் காற்றின் மூலம் அணை அருகாமையில் உள்ள கோட்டையூர், தெலுங்கனுார், பண்ணவாடி பகுதியிலுள்ள குக்கிராமங்களுக்கும் பரவுகிறது. பகலை விட இரவு நேரம் துர்நாற்றம் அதிகமாக இருப்பதால் கிராம மக்கள் துர்நாற்றத்தை சகிக்க முடியாமல் அவதிப்படுகின்றனர். மீனவர்கள் பெரும்பாலோர் இரவில் வீட்டுக்கு வெளியே கட்டில் போட்டு தூங்குவது வழக்கம். ஒருவாரமாக தண்ணீரில் வீசும் துர்நாற்றம் காரணமாக கோட்டையூர் பகுதி மக்கள் இரவில் வெளியில் படுத்து தூங்குவதில்லை. துர்நாற்றத்தை தவிர்க்க இரவில் வீடுகளின் ஜன்னல், கதவுகளையும் பூட்டியே தூங்குகின்றனர். மேலும், கரையோர மக்கள் பெரும்பாலோர் அணை நீரையே குளிக்கவும், குடிக்கவும் பயன்படுத்தினர். தற்போது தண்ணீர் பச்சை நிறமாக மாறியுள்ளதால், அதை குடிக்க முடியாமல் அவதிப்படுகின்றனர். பச்சை நிறமாக மாறியுள்ள நீரில் பிடிபடும் மீன்களை சமையல் செய்தால், அந்த குழம்பும் துர்நாற்றம் வீசுவதாக கரையோர மக்கள் தெரிவிக்கின்றனர்.

கர்நாடகாவில் உள்ள கபினி அணையில் இருந்து, 241 கி.மீ., தூரத்திலும், கே.ஆர்.எஸ்., அணையில் இருந்து, 182 கி.மீ.,தூரத்திலும் மேட்டூர் அணை உள்ளது. கபினி அணையில் இருந்து திறக்கப்படும் உபரி நீர் மேட்டூர் அணைக்கு வரும்பட்சத்தில் மேட்டூர் அணை நீரில் எந்தவித

மாற்றமும் ஏற்படுவதில்லை. ஆனால், கே.ஆர்.எஸ்., அணையில் திறக்கும் உபரி நீர் மேட்டூர் அணைக்கு வந்தபின்பும் நீர் பச்சை நிறமாக மாறி துர்நாற்றம் வீசுகிறது. கே..ஆர்.எஸ்., அணையில் இருந்து வெளியேறி காவிரியாற்றில் வரும் நீரில் கர்நாடகாவில் பல பகுதியில் உள்ள சாக்கடை கழிவுநீர், ரசாயன கழிவுநீர் கலப்பதே மேட்டூர் அணை நீர் துர்நாற்றம் வீசுவதற்கு காரணம் என மீனவர்கள் தெரிவிக்கின்றனர். ஒரு வாரமாக கோட்டையூர் முதல் பண்ணவாடி வரை மேட்டூர் அணையில் தேங்கி நிற்கும் நீர் துர்நாற்றம் வீசுவதாலும், அந்த நீரை குடித்தால் உடல் நிலை பாதிப்பதும் கரையோர கிராம மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

**ஆத்தூரில் பருத்தி ஏலம் ரூ.12 லட்சம் வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2011,00:55 IST

ஆத்தூர் : ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்தில், 800 மூட்டை பருத்தி, 12 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று நடந்த பருத்தி ஏலத்துக்கு, ஆத்தூர், தம்மம்பட்டி, கெங்கவல்லி, தலைவாசல், சின்னசேலம், திருவண்ணாமலை, நைனார்பாளையம் ஆகிய பகுதியை சேர்ந்த விவசாயிகள், விளைவித்த பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்தனர். ஏலத்தில், டி.சி.ஹெச்., ரக பருத்தி குவிண்டால் குறைந்தபட்சமாக, 3,899 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 4,619 ரூபாய்க்கும், பி.டி., ரக பருத்தி குறைந்தபட்சமாக, 4,019 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 4,829 ரூபாய்க்கும், கொட்டு பருத்தி குவிண்டால் குறைந்த பட்சமாக, 1,009 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 2,599 ரூபாய்க்கும் விற்பனையானது. ஏலத்தில், விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்த, 800 மூட்டை பருத்தி, 12 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

**விவசாயம் சார்ந்த தொழிலுக்கு வங்கிக்கடன்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2011,01:12 IST

நாமக்கல்: ""மகளிர் சுயஉதவி குழுக்கள், விவசாயம் சார்ந்த தொழில்களான, மாடு வளர்ப்பு, கன்று வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு போன்ற தொழில்களில் ஈடுபட,, வங்கிக்கடன் வசதி செய்யப்படும்,'' என, ஆய்வின்போது கலெக்டர் குமரகுருபரன் கூறினார். மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாடு முகமை சார்பில், நாமக்கல் மாவட்டத்தில், மோகனூர் யூனியனில், 13 நீர்வடிப்பகுதிகள் தேர்வு செய்யப்பட்டது. தற்போது, தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில், திட்டம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி, மக்களே ஐந்தாண்டுகளுக்கு விவசாயிகளின்

நிலம், ஊரில் உள்ள நீர் நிலைகளில் மழை நீரை தங்க வைக்க என்ன பணிகளை மேற்கொள்ளலாம் என, மக்களிடம் கேட்டறிந்து மக்களே உள்ளூர் வரைபடம், வள வரைபடம், பயிர் சாகுபடி குறித்த வரைபடங்கள் வரைந்து, திட்ட அறிக்கை தயாரித்து, மாவட்ட கலெக்டருக்கு வழங்குவர்.

அதைக்கொண்டு, மாவட்ட கலெக்டர், ஒரு நீர்வடிப்பகுதியில் ஒரு ஹெக்டேருக்கு, 12 ஆயிரம் ரூபாய் வீதம், கிராமத்தில் உள்ள நீர்வடிப்பகுதி சங்கம் பணிகளை மேற்கொள்ள, பத்து சதவீதம் விவசாயிகளின் பங்கு, மீதம் உள்ள 90 சதவீதம் மானியத்தில், திட்டப்பணிகள் நிறைவேற்றப்படும். அதற்கான ஊரக மக்கள் மதிப்பாய்வு முகாம், மோகனூர் யூனியன் அரூர் நீர்வடிப்பகுதியில் நடந்தது. நாமக்கல் ரத்தினசபாபதி சுற்றுச்சூழல் கிராம வளர்ச்சி நிறுவன இயக்குனர் தில்லை சிவக்குமார் தலைமை வகித்தார். நீர்வடிப்பகுதிய தலைவர் ராசப்பன் வரவேற்றார். அரூர் பஞ்சாயத்து தலைவர் உமாராணி முன்னிலை வகித்தார். முகாமை, கலெக்டர் குமரகுருபரன் ஆய்வு செய்தார். விவசாயிகள் வரைந்த வள வரைபடம், பருவகால வரைபடங்களை பார்வையிட்டு, திட்டப்பணிகள் குறித்து விளக்கினார்.

அப்போது அவர் பேசியதாவது: விவசாயிகள், மகளிர் சுயஉதவி குழுக்கள் திட்டப்பணிகளில் முழுமையாக பங்கேற்க வேண்டும். மழைக் காலத்தில் வழிந்தோடும் தண்ணீரை வீணாக்காமல், விவசாயிகள் தங்கள் நிலங்களில் வரப்புகளை கட்டி கொள்ளுதல், தடுப்புச்சுவர் கட்டுதல், மண் வரப்பு அமைத்தல், குறிப்பாக தங்களுடைய நிலங்களில் பண்ணை குட்டைகளை அமைத்து, நிலத்தின் மண் வளத்தையும், நீர் வளத்தையும் மேம்படுத்த வேண்டும். மேலும், மகளிர் சுயஉதவி குழுக்கள், விவசாயம் சார்ந்த தொழில்களான, மாடு வளர்ப்பு, கன்று வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு போன்ற தொழில்களில் ஈடுபட வங்கிக்கடன் வசதி உடனடியாக ஏற்பாடு செய்யப்படும். இவ்வாறு பேசினார். வேளாண் இணை இயக்குனர் பிரபாகரன், திட்ட பொருளியர் நாகராஜன், சமூகவியலார் மணிவாசகம், முன்வோடி விவசாயிகள், மகளிர் சுயஉதவி குழுவினர் உள்பட பலர் பங்கேற்றனர்.

**பயிறு வகை பயிர்களுக்கு மானிய விலையில் இடுபொருட்கள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2011,00:08 IST

புதியம்புத்தூர் : தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயறு வகை பயிர்களுக்கு மானிய விலையில் இடுபொருள்கள் வேளாண் துறையால் வழங்கப்படுகிறது. ஓட்டப்பிடாரம் வட்டாரத்தில் மானாவரி விவசாயத்தில் உளுந்து மற்றும் பாசிப்பயறு வகைகள் ஏராளமாக

பயிரிடப்படுகின்றது. இப்பயிர்களின் உற்பத்தியை பெருக்கும் வகையில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஆதார விதைகள் மற்றும் சான்று விதைகள் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு கிலோவிற்கு 10 வீதம் நிதியாக 3 லட்சமும், விவசாயிகளுக்கு சான்று விதைகளை மானியத்தில் விநியோகித்திட கிலோவிற்கு 12 வீதம், 4 1/2 லட்சமும், பயறு வகை பயிர்களுக்கு 50 சதவீத மானியத்தில் ஜிப்சம் மற்றும் நுண் உரம் இடுவதற்கு நிதியாக 1.8 லட்சமும், உயிர் உரங்களான ரைசோபியம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா இடுவதற்கு மானியமாக 0.36 லட்சமும், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பிற்காக 1.8 லட்சமும், பயிர் பாதுகாப்பு மருந்துகள் 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கிட 1.2 லட்சமும் ரோட்டோவேட்டர் கருவிகளுக்கு ஒரு கருவிகளுக்கு 0.03 வீதம் 6 கருவிகளுக்கு 1.8 லட்சமும், தெளிப்பான்கள் மானிய விலையில் வழங்கிட 0.3 லட்சமும், பம்பு செட்டுகள் மானியத்தில் வழங்கிட 0.04 லட்சமும், களைக்கொல்லி மானியத்தில் விநியோகித்திட 0.3 லட்சமும், பைப் லைன் விநியோகத்திற்கு 1.2 லட்சமும், தெளிப்பு நீர் கருவிகளுக்கு 0.22 லட்சமும், வயல்வெளி பள்ளி அமைத்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்திட 0.51 லட்சமும் மானியம் உள்ளது.

மேற்சொன்ன சலுகைகளை பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்கள் நயினார், பிரான்சிஸ், முருகவேணி, சிக்கந்தர் பாட்சா, சாந்தலெட்சுமி ஆகியோரை அணுகி பயனடைந்து கொள்ளுமாறு ஓட்டப்பிடாரம் வேளாண்மை உதவி இயக்குனர் மோகன்ராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

**வத்தல் மலையில் காபி சாகுபடி திட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2011,00:55 IST

தர்மபுரி: தர்மபுரி அடுத்த வத்தல் மலையில், மலைவாழ் மக்கள் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 15 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் காபி சாகுபடி திட்டத்தை கலெக்டர் லில்லி துவக்கி வைத்தார். தர்மபுரியில் உள்ள வத்தல் மலை கிராமம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 3 ஆயிரம் அடி உயரத்தில் உள்ளது. இங்குள்ள மக்கள் மானாவாரி பயிர்களான சாமை, தினை, ராகி, கடுகு, அவரை போன்ற பயிர்களை சாகுபடி செய்து வருவதால், பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கியுள்ளனர். இப்பகுதி காபி வளர்ப்புக்கு ஏற்றதாக சூழல் உள்ளது. இதனால், காபி வளர்ப்பை அதிகரித்து, இங்குள்ளவர்களின் பொருளாதாரத்தை உயர்த்தும் வகையில், மாவட்ட வேளாண் துறை காபி சாகுபடி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, 15 லட்சம் நிதி ஒதுக்கீட்டில், 159 ஏக்கர் பரப்பில், 184 பயனாளிகளுக்கு காபி சாகுபடி செய்ய திட்டமிட்டு இதுவரை, 95 ஏக்கர் பரப்பில் காபி நடவு செய்யப்பட்டுள்ளது. ஒரு ஏக்கருக்கு 300 கிலோ முதல் 400 கிலோ வரை மகசூல் கிடைக்கும். இவற்றின் மூலம் ஆண்டொன்றுக்கு ஏக்கருக்கு, 60 ஆயிரம் முதல் 75 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது. இத்திட்டத்தின் மூலம், 184 பயனாளிகள் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைவதுடன், அக் குடும்பங்களுக்கு முழு நேர வேலைவாய்ப்பும் கிடைத்துள்ளது.

காபி பயிரிடுவதன் மூலம் இப்பகுதி மக்களுக்கு ஆண்டொன்றுக்கு, 1.34 கோடி வருவாய் கிடைக்கும். வேளாண் துறை சார்பில் பெரியூரில் நடந்த விழாவில், தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு காபி நாற்றுகளை வழங்கி, நடவுப் பணி மேற்கொள்ள கலெக்டர் அறிவுரை வழங்கி பேசினார். வேளாண்மை இணை இயக்குனர் ராஜன், துணை இயக்குனர் மேகநாதன், தோட்டக்கலைத் துறை துணை இயக்குனர் கலைச்செல்வி, உதவி இயக்குனர் முருகன் , வேளாண் துணை இயக்குனர் மாது, திட்ட பொருளியலர் ராமமூர்த்தி, வத்தல் மலை காபி வளர்ப்போர் சங்கத் தலைவர் பெரியசாமி, மாவட்ட நீர்வடிப்பகுதிய மேம்பாட்டு முகமை அலுவலர் ஜெயசக்தி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**மாற்றுப்பயிர் சாகுபடி விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2011,01:19 IST

பல்லடம் : சின்ன வெங்காயத்துக்கு மார்க்கெட்டில் கட்டுபடியான கொள்முதல் விலை கிடைக்காததால், பல்லடம் பகுதி விவசாயிகள் மாற்று பயிர் சாகுபடியில் இறங்கியுள்ளனர். பல்லடம், பொங்கலூர், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் ஒவ்வொரு பருவமும் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவுக்கு சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டு அறுவடை செய்யப்படுகிறது. 30 நாட்கள் நாற்றங்கால் இட்டு, பின், பாத்திகளில் நடவு செய்யப்படும் சின்ன வெங்காயம், 90 நாளில் அறுவடைக்கு வருகிறது.

நேரிடையாக விதை வெங்காயம் ஊன்றி, அதன் மூலம் சாகுபடி செய்யப்படும் சின்ன வெங்காயம், விதை ஊன்றிய 70 நாளில் அறுவடைக்கு வருகிறது. கடந்த இரண்டு மாதங்களாகவே பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் சின்ன வெங்காயம் அறுவடை நடந்து வருகிறது. ஆந்திரா, கர்நாடகா மாநில வரத்து காரணமாக, இப்பகுதியில் இருந்து திருப்பூர், கோவை, மதுரை மற்றும் கேரள மார்க்கெட்டுக்கு அனுப்பப்படும் சின்ன வெங்காயத்துக்கு "கிராக்கி' இல்லை. இதன் காரணமாக, முன்பு ரூ.18க்கு கொள்முதல் செய்யப்பட்ட சின்ன வெங்காயம், தற்போது ரூ.12க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இவ்விலை சாகுபடி செலவு, மருந்து அடிப்பு செலவு, அறுவடை

செலவு மற்றும் விற்பனைக்கு எடுத்து செல்லும் செலவை கணக்கில் கொண்டால் கட்டுபடியானதாக இல்லை.

குறைந்தபட்ச கொள்முதல் விலை கிலோவுக்கு ரூ.17 ஆக இருக்க வேண்டும் என விவசாயிகள் விரும்புகின்றனர். ஆனால், கொள்முதல் விலை சரிவாக உள்ளதால், பல்லடம், பொங்கலூர், சுல்தான்பேட்டை பகுதிகளில் அறு வடை செய்துள்ள விவசாயிகள், வெண்டை, கத்திரி, தக்காளி, பீட்ரூட் போன்ற மாற்றுப்பயிர் சாகுபடியில் ஆர்வம் காட்டுகின்றனர்.

**மானியத்தில் உயிர் உரங்கள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 19,2011,22:36 IST

வடமதுரை : உயிர் உர பொட்டலங்கள் மானிய விலையில் வழங்கப்படுவதாக வடமதுரை வேளாண்மை உதவி இயக்குனர் பாஸ்கரன் தெரிவித்தார்.அவர் கூறியதாவது:இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கில் ஆண்டுதோறும் 25,000 உயிர் உர பொட்டலங்கள் வழங்கப்படுகிறது. உயிர் உரங்களை பயன்படுத்துவதன் மூலம் மண்ணின் தன்மை கெடாமல், சத்துக்களை எடுத்து வேர்கள் மூலம் செடிகளுக்கு வழங்கி மகசூலை கூட்ட வழி செய்கிறது. இவ்வகை உயிர் உரங்களை உரிய காலத்தில் பெற்று விவசாயிகளுக்கு வினியோகிக்கப்படுகிறது. இவ்வாண்டு அசோஸ்பைரில்லம், பாஸ்போபேக்ட்டீரியா பொட்டலங்கள் புதிதாக பெறப்பட்டு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மானியத்தில் உயிர் உரங்கள் பெற்று மானாவாரி சாகுபடியில் செலவீனத்தை குறைக்கலாம். ஆர்வமுள்ள விவசாயிகள் உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்,' என்றார்.

---

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## நடப்பு நிதி ஆண்டின் முதல் காலாண்டில்

## அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதி 34.5% அதிகரிப்பு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
நடப்பு நிதி ஆண்டின் முதல் காலாண்டில் (ஏப்ரல் – ஜுன்) சமையல் எண்ணெய், பருப்பு வகைகள், மோட்டார் வாகனங்கள், பால், உணவு தானியங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதி ரூ.21,537 கோடியாக உயர்ந்துள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் இது ரூ.16,016 கோடியாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது இறக்குமதி 34.5 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த புள்ளி விவரங்களை மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

சமையல் எண்ணெய்

முதல் காலாண்டில் அனைத்து பொருள்களின் ஒட்டுமொத்த இறக்குமதி ரூ.4.98 லட்சம் கோடியாக இருந்தது. இதில், அத்தியாவசிய பொருள்களின் அளவு 4 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

சமையல் எண்ணெயை அதிக அளவில் இறக்குமதி செய்வதில், உலக அளவில் நம் நாடு முதலிடத்தில் உள்ளது. இதன் பயன்பாட்டில் முன்னிலை வகித்து வரும் நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது. முதல் காலாண்டில் இதன் இறக்குமதி 51 சதவீதம் அதிகரித்து ரூ.6,055.60 கோடியிலிருந்து ரூ.9,145.39 கோடியாக உயர்ந் துள்ளது. அத்தியாவசிய பொருள்களின் ஒட்டுமொத்த இறக்குமதியில் சமையல் எண்ணெய் இறக்குமதியின் பங்களிப்பு 42.5 சதவீதமாக உள்ளது.

இந்தியாவில், உணவு பொருள் பணவீக்கம் அதிகமாக உள்ளது. செப்டம்பர் 3–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் இது ரூ.9.47 சதவீதமாக உள்ளது. எனவே, உள்நாட்டில் அளிப்பை அதிகரிக்கும் வகையில் சமையல் எண்ணெய் மற்றும் பருப்பு வகைகளை இந்தியா அதிக அளவில் இறக்குமதி செய்து வருகிறது.

பருப்பு வகைகள்

இதே காலத்தில், பருப்பு வகைகள் இறக்குமதி 27.2 சதவீதம் அதிகரித்து ரூ.1,585.57 கோடியிலிருந்து ரூ.2,016.26 கோடியாக உயர்ந்துள்ளது. அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதியில் இதன் பங்களிப்பு 9.4 சதவீதமாக உள்ளது. அண்மைக் காலமாக நாட்டில் பருப்பு வகைகள் உற்பத்தி ஓரளவிற்கு அதிகரித்து வருகிறது. இதனையடுத்து, இதன் விலை குறைந்துள்ளது.

ஜுன் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில், மோட்டார் வாகனங்கள் இறக்கு மதி வியக்கத்தக்க வகையில் 128.80 சதவீதம் அதிகரித்து ரூ.433.89 கோடியிலிருந்து ரூ.992.64 கோடியாக உயர்ந்துள்ளது. மோட்டார் வாகனங்கள் துறையில் முதல் காலாண்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை இது எடுத்துக்காட்டுகிறது.

குடைகள், பூட்டுகள், பொம்மைகள், கண்ணாடி சாமான்கள் உள்ளிட்ட சிறு தொழில் நிறுவன தயாரிப்புகள் இறக்குமதி 53.9 சதவீதம் அதிகரித்து ரூ.483.07 கோடியாக உயர்ந்துள்ளது. ஆல்கஹால் மற்றும் நறுமண பொருள்கள் இறக்குமதி

முறையே 45.2 சதவீதம் மற்றும 41.7 சதவீதம உயர்ந்துள்ளது.

உணவு தானியங்கள்

அதேசமயம், முதல் காலாண்டில் உணவு தானியங்கள், பால் மற்றும் பால் பொருள்கள் இறக்குமதி முறையே 85.2 சதவீதம் மற்றும் 57.9 சதவீதம் குறைந் துள்ளது. தேயிலை மற்றும் காபி இறக்குமதி 36.4 சதவீதம் குறைந்துள்ளது. எனினும், ஒட்டுமொத்தத்தில் அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதி மிகவும் அதிகரித்துள்ளது.

உள்நாட்டில் உணவு பொருள்கள் விலை மிகவும் அதிகரிக்கும் நிலையில், அத்தியாவசிய பொருள்களுக்கான இறக்குமதி தீர்வையை மத்திய அரசு குறைக்கும். எனினும், இவற்றின் இறக்குமதியால் உள்நாட்டு நிறுவனங்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறதா என்பதை மத்திய அரசு கண்காணித்து வருகிறது. இந்த பாதிப்பை எதிர்கொள்ள பொருள் குவிப்பு வரி மற்றும் உள்நாட்டு வர்த்தக பாதுகாப்பு வரி போன்றவற்றை விதித்து வருகிறது.

பணவீக்கம்

இந்நிலையில், சென்ற சில தினங்களாக அமெரிக்க டாலருக்கு எதிராக இந்திய ரூபாய் மதிப்பு சரிவடைந்து வருகிறது. இதனால், இறக்குமதி செலவினம் அதிகரிக்கும். ஒரு டாலர் மதிப்பு ரூ.44–ஆக இருக்கும்போது 100 டாலர் மதிப்பிற்கு ஒரு பொருளை இறக்குமதி செய்ய ரூ.4,400 செலுத்த வேண்டும். இது, ரூ.48–ஆக அதிகரிக்கும்போது இது ரூ.4,800–ஆக உயரும்.

உணவு பணவீக்கம் அதிகரித்து வரும் நிலையில், ரூபாய் மதிப்பு சரிவால், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சமையல் எண்ணெய், பருப்பு வகைகள் போன்றவற்றின் விலை உயர வாய்ப்புள்ளது. இது, மத்திய அரசுக்கு ஒரு சவாலாக உள்ளது.